**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு -2018**

**------------------------------------------------------------------**

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

---------------------------------------------

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக முகவராண்மையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழுவின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அட்டுறு அடிப்படையில் வருமானங்களையும் | 2019 ஆம் ஆண்டு முதல் நிலையான | வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் |

| | | |
|---|---|---|
| செலவினங்களையும் கணக்கு வைத்தல் ஆணைக்குழுவின் கொள்கை என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 405,188 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | வைப்பு வட்டி அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | கொள்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.12 இன் ஏற்பாடுகளுக்கு புறம்பாக ஆணைக்குழுவின் ஊழியர்களுக்காக 2015 ஆம் ஆண்டின் போது தனியார் காப்புறுதித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக 46 ஊழியர்களுக்கான காப்புறுதி பங்களிப்பில் 50 சதவீதமான ரூபா 1,335,941 தனியார் காப்புறுதிக் கம்பனிக்கு ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டிருந்தது. | உங்களின் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளுகின் றோம். | இவ்வாறான செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.12 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | | |
| (அ) | உரிமை மற்றும் மூலதனம் | 33,747,436 | பேரேட்டுக் கணக்கு / பட்டோலை | Equity<br>Capital b/f<br>During the year<br>Retained Earning<br>Defect during year | 12,827,777<br>51,300,000<br>18,092,806<br>(36,998,200)<br><br>(13,838,669)<br>------------------<br>31,383,715<br>======== | நிதிக் கூற்றுக்களுக்கு அடிப்படையான தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுத்தி வைத்தல் உழைப்பு | (36,998,200) | பேரேட்டுக் கணக்கு / பட்டோலை | நிறுவனத்தில் பயன்படுத்தப்படுகின்ற Quick Book Package இல் உள்ளடக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் உழைப்புக்களின் பேரேட்டு அச்சிடல் பிரதி பெறப்படவில்லை. | | நிதிக் கூற்றுக்களுக்கு அடிப்படையான தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டின் சீராக்கம் | 4,995,019 | ஆரம்ப மீதியாகக் காணப்பட்ட ரூபா 4,995,019 தொகையான பெறுமதி ஆண்டின் போது தீர்க்கப்பட்ட முறைமையக் காண்பிக்கின்ற பேரேட்டுக் கணக்கு | உங்களின் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களுக்கு அடிப்படையான தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.4 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழு பேணிச் செல்கின்ற வங்கிக் கணக்கில் 2018 சனவரி முதல் திசெம்பர் வரை 12 மாதங்களின் சராசரி சேமிப்பு ரூபா 25,728,148 ஆகக் காணப்பட்டது. இந்தக் காலப்பகுதி முழுவதும் ரூபா 21 மில்லியனுக்கும் ரூபா 33 மில்லியனுக்கும் இடையிலான பணம் பயன்பாடின்றி காணப்பட்டதுடன் இந்த பணத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | முன்னர் காண்பிக்கப்பட்ட பிரகாரம் அந்த நிதியம் ஆரம்பம் முதல் காணப்பட்ட பணமாகும். ஆண்டிற்குரியதாக கிடைக்கின்ற பணத்தின் அளவு குறைகின்ற சந்தர்ப்பத்தின் போது அந்த நிதியம் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணம்:- இந்த ஆண்டிற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த பணத்தின் அளவை முழுமையாக செலவிடப்பட்டமையினால் மேற்கூறப்பட்ட நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்தது. | மிகைப் பணத்தை முதலீடு செய்து நிதி வளங்களை சரியான முறையில் பேணி வருமானத்தை உழைப்பது தொடர்பில் கவனம் செலுத்துதல் பொருத்தமானதாகும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 13,838,669 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,153,149 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,314,480 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கட்டிடம் மற்றும் பராமரிப்புச் செலவினம் ரூபா 1,797,441 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் சட்ட உதவி வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையை உள்ளடக்கி மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுப்பதற்கு காணப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 42,506 ஆகும். அதில் 10,075 வழக்குகள் அளவில் தீர்த்து வைப்பதற்காக மீளாய்வாண்டின் போது சட்டத்தரணிகளின் உதவி (சட்ட உதவி) வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேலும் சேவைகளை வழங்குவதற்காக எஞ்சியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 32,431 ஆகும். அது மொத்த சேவை வழங்கலுக்குரிய வழக்குகளின் எண்ணிக்கையில் 76 சதவீதத்தைக் கொண்டிருந்தது. | வழக்கு நடவடிக்கைகளில் காணப்படுகின்ற தாமதம் ஒட்டுமொத்த நீதிமன்ற முறைமைகளில் காணப்படுகின்ற பொதுவான பிரச்சினையாகும். | சட்டத்தரணிகளின் உதவி (சட்ட உதவி) வழங்கும் பணிகள் ஆணைக்குழுவின் அடிப்படை பணிப்பொறுப்பாக இருந்தமையால் அதனை வினைத்திறனாக அமுல்படுத்த வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆணடில் ஆணைக்குழுவினால் றுவன்வெல்ல, எல்பிட்டிய, கலகெதற, ஆனமடுவ மற்றும் ஹெட்டிபொல என்ற இடங்களில் 05 நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 15,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஆனமடுவ இந்த ஆண்டில் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் எவ்பிட்டியவிற்குப் பதிலாக பிபிலேயில் நிலையம் இந்த ஆண்டில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. றுவென்வெல்ல நிலையத்திற்குப் பதிலாக வத்தளை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களுக்குரிய செலவினங்கள் சரியாக மதிப்பிடப்பட்டு அந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்குள்ள சாத்தியத்தின் அடிப்படையில் நிதிஏற்பாடு பெறப்பட வேண்டும். |
| (ஆ) 2017 ஆம் ஆண்டில் 02 புதிய கிளை அலுவலகங்கள் களுத்துறை மற்றும் கடுவல என்ற பிரதேசங்களில் நிர்மாணிப்பதற்காக ரூபா | களுத்துறை நிலையம் வேறு இடமொன்றில் நிர்மாணிக்கப்பட்டதாக நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக வேறொரு காணியொன்று வழங்கப்பட்டதாக | செயற்திட்டங்களுக்குரிய செலவினங்கள் சரியாக மதிப்பிடப்பட்டு அந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்குள்ள சாத்தியத்தின் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| 2,840,000 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெறாமையின் காரணமாக மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | எங்களால் நீதி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்ட போதும் அமைச்சினால் அந்த நிலத்தை கையேற்பதாக எங்களுக்கு இதுவரையிலும் அறிவிக்காமையினால் அது தொடர்பாக செயற்படுவதற்கு முடியாதிருந்தது. கடுவெல மற்றும் தம்புள்ள நிலையங்களை நிர்மாணிப்பதற்காக தேவையான திட்டம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பியதன் பின்னர் அவர்களினால் தற்போது காணப்படுகின்ற நீதிமன்ற வளவின் உரித்துறுதி மற்றும் நில வரைபடம் என்பவற்றை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக நீதி அமைச்சு அறிவித்திருந்தும் அவர்கள் இதுவரையிலும் அதனை சமர்ப்பிக்காமையினால் இதுவரையிலும் நிர்மாண நடவடிக்கைகளைச் செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிஏற்பாடு பெறப்பட வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிரஷ்ட நிலையில் பதவியணியின் 06 பதவிகளுக்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 16 ஆக இருந்த போதிலும், மொத்த பதவிகளின் எண்ணிக்கையும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அந்த பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அவ்வாறே ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 05 பதவிகளுக்காக 02 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையிலும், 51 உத்தியோகத்தர்கள் நிரந்தர அடிப்படையிலும் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | 2018 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. 2019 ஆம் ஆண்டில் சனவரியிலேயே ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதனால் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 06 பதவிகள் அல்லாமல் 05 மாத்திரமாகும். அவர்களை சேர்க்கும் போது காணப்பட்ட பதவிகளின் பிரகாரம் சேர்க்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் அவர்களுக்கு அந்த பதவிகளின் பிரகாரம் அமர்த்தப்படுகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் வெற்றிடங்களை நிரப்பி நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்த பிரதேச நிலையங்களை வலைப்பின்னல் படுத்தி சட்டப் பிரிவின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக ஈ அறிக்கையை தயாரிப்பதற்காக ரூபா 500,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஈ அறிக்கைக்கான செலவினங்கள் செய்யப்படாதிருந்ததால் அதனைத் திட்டமிடப்பட்ட தரப்பினருடன் இணைந்து அந்த திட்டம் தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள இலக்குகளை உரிய பிரகாரம் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |